# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2017 செப்டெம்பர் மாதம் 19 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**III.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**IV.** மனுக்கள்

**V.** கேள்விகள்

<u>நடவடிக்கை ஒழுங்கு விதி இல 31(அ) (1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க பதில் கொடுப்பதற்கு காலம் கேட்கப்பட்ட கேள்வி</u>

**01.** **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.08.08 ஆந் திகதி சபை ஒத்திவைப்பு வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)17/ADG-06)**

அ. போக்குவரத்து அதிகார சபையின் சில நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் முறையற்றன என்பதனை அறிவீர்களா ? அந் நியமனங்களை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

ஆ. தற்போதைய தவிசாளர் மேற்கொண்ட நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக கணக்காய்வு அல்லது பிற விசாரணை ஒன்றினை மேற்கொண்டீர்களா ? முடிவினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

இ. ஒழுங்குவிதிக்கு முரணான நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்கு தவிசாளர் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? இல்லையாயின் ஏன் ?

ஈ. பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட நிர்வாக மற்றும் நிதி பிரதி முகாமையாளர்கள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? இல்லையாயின் ஏன் ?

உ. உங்களது மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் ஜீவிந்திர கீர்த்திரத்ன அவர்களுக்கு நிர்வாக உத்தியோகத்தர் (பயணம்) பதவியினை பெற்றுக் கொடுப்பதற்கு நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டதா ? இல்லையாயின் ஏன் ?

ஊ. தவிசாளர் நியமித்த முகாமைத்துவ உதவியாளரும், காரியாலய உதவியாளரும் அதிகார சபைக்கு வருகை தராது தவிசாளரின் புளத்சிங்ஹல அரசியல் காரியாலயத்திற்கு கடமைக்குச் செல்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

எ. ஐந்து வருடங்கள் அனுபவம் தேவையான உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு மூன்று வருடங்கள் அனுபவம் உள்ள புலத்சிங்ஹளவைச் சேர்ந்த ஒருவரும், தகவல் அமைப்பின் உதவியாளராக ஜா-எலயைச் சேர்ந்த ஒருவரும் அரசியல் தொடர்பினாலே நியமிக்கப்பட்டனர் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? ஏற்றுக் கொள்ளவில்லையாயின் காரணம் என்ன ?

ஏ. சாரதி பாடசாலையின் அதிபரின் பதவி உயர்வு மற்றும் பயிற்சி ஆராய்ச்சி அத்துடன் திட்டமிடல் பிரிவின் முகாமையாளர் ஒழுங்கான விசாரணை சபை ஒன்று இல்லாமலேயே நியமிக்கப்பட்டார் என்பதனை அறிவீர்களா ? அச் சபையின் புள்ளிகளை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ மஞ்சுல பிரசன்ன சம்பத் உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/88)**

அ. i. பியகம பிரதேச செயலாளர் பிரிவினுள் இது வரை எத்தனை டெங்கு நோயாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர் ?
ii. பியகம பிரதேச செயலாளர் பிரிவினுள் டெங்கு நோயினால் எத்தனை மரணங்கள் ஏற்பட்டுள்ளன ?
iii. பியகம பிரதேச செயலாளர் பிரிவினுள் டெங்கு நோயின் தாக்கம் அதிகமான கிராம சேவகர் பிரிவு எது ?
iv. அதற்குக் காரணமாக எதை நீங்கள் முன்வைக்கின்றீர்கள் ?
v. பியகம பிரதேச செயலாளர் பிரிவினுள் புகை அடிப்பதற்காக எத்தனை இயந்திரங்கள் காணப்படுகின்றன ?
vi. அது எத்தாபனங்களிடம் ?
vii. அந்த இயந்திரங்கள் போதுமானவையா ?

ஆ. i. பியகம பிரதேச செயலாளர் பிரிவினுள் டெங்கு நோயினை ஒழிப்பதற்காக நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?
ii. அவற்றுக்கு தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

**03.** **கௌரவ மஞ்சுல பிரசன்ன சம்பத் உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/89)**

அ. i. கம்பஹ கல்வி வலயத்தினுள் காணப்படும் பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?
ii. அப் பாடசாலைகளில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?
iii. அப் பாடசாலைகளுள், எத்தனை பெண்கள் பாடசாலைகள் காணப்படுகின்றனர் ?
iv. அதில் எத்தனை மாணவிகள் இருக்கின்றனர் ?
v. களனி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு எத்தனை பதில் கடமையாற்றும் அதிபர்கள் உள்ளனர் ?

ஆ. i. பியகம வலயப் பாடசாலைகளின் மாணவ மாணவிகளுள் 2016 ஆம் ஆண்டினுள் பல்கலைகழகத்திற்கு செல்ல எத்தனை பேர் தகைமை பெற்றுள்ளனர் ?
ii. 2016 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவ மாணவிகள் எவ்வளவு ?
iii. எல்லா பாடங்களிலும் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத எண்ணிக்கை எவ்வளவு ?

இ. i. பியகம வலயப் பாடசாலைகளுள் 2016 ஆம் ஆண்டு சாதாரண தர முடிவுகளுள் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களை எப் பாடசாலைகள் பெற்றுக் கொண்டுள்ளன ?
ii. 2016 ஆம் ஆண்டு சாதாரண தர முடிவுகளுக்கு இணங்க பியகம வலயத்தினுள் பலவீனமான பாடசாலைகள் எவை ?
iii. 2017 ஆம் ஆண்டினுள் அந்தப் பாடசாலைகளின் முடிவுகளை அதிகரிப்பதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஈ. i. கந்துபொட மஹா வித்தியாலயத்தில் 2016 ஆண்டு சாதாரண தர பரீட்சைக்கு எத்தனை மாணவ மாணவிகள் தோற்றினர் ?
ii. எத்தனை பேர் சித்தியெய்தி உள்ளனர் ?
iii. எத்தனை பேர் சித்தியெய்த வில்லை ?
iv. 2016 புலமைப் பரிசில் பரீட்சைக்கு கந்துபொட மஹா வித்தியாலயத்தில் இருந்து எத்தனை பேர் தோற்றியுள்ளனர் ? அதில் எத்தனை பேர் சித்தியடைந்துள்ளனர் ?

**04.** **கௌரவ ரொயிஸ் விஜித பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/90)**

அ. மேல் மாகாணத்தின் ஆசிரிய சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக 2014.12.27 ஆந் திகதி நடைபெற்ற பரீட்சையில் எத்தனை அபேட்சகர்கள் சித்தியெய்தியுள்ளனர் ?

ஆ. அவ்வாறு சித்தியெய்தியவர்களில் எத்தனை பேருக்கு பட்டதாரி ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன ?

இ. நியமனம் கிடைக்காத எனினும் பரீட்சையில் சித்தியெய்திய எத்தனை அபேட்சகர்கள் காத்திருக்கும் பட்டியலில் இருக்கின்றனர் ?

ஈ. அவ் அபேட்சகர்களுக்கு ஆசிரிய நியமனத்தைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

உ. அவ்வாறு பெற்றுக் கொடுக்க முடியாத விடத்து அதற்கான காரணம் யாது ?

ஊ. மேல் மாகாணத்தினுள் பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

எ. அவ்வாறே மேல் மாகாணத்தினுள் ஆசிரிய பற்றாக்குறை
விஞ்ஞான பிரிவில் எத்தனை ?
வர்த்தக பிரிவில் எத்தனை ?
கலை பிரிவில் எத்தனை ? காணப்படுகின்றன

**05.** **கௌரவ ரொயிஸ் விஜித பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/91)**

அ. 1998 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க கூட்டுறவு நியதிச் சட்டத்தினை மீறிய நான்கு (4) நபர்களுக்கு நீர்கொழும்பு பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையில் பதவிகளை வகிப்பது சட்டரீதியானதாகுமா ?

ஆ. அச் சங்கத்தின் முன்னைநாள் தவிசாளர் மற்றும் தற்போதைய தவிசாளர் ஆகியோர் அதிகார பிரதேசத்திற்கு வெளியில் வசிக்கின்றனர் என்ற குற்றச் சாட்டினை விசாரணை செய்த உத்தியோகத்தர்கள் முடிவினை வழங்காது பின்னடிக்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அக் கூட்டுறவுச் சங்கத்தின் தவிசாளர் அதிகார பிரதேசத்தினுள் பாரிய அளவான எண்ணை நிரப்பும் நிலையம் ஒன்றினதும் ஹாட்வெயார் நிறுவனத்தினதும் உரிமையாளர் என்பது பற்றிய முறைப்பாட்டினை விசாரணை செய்யும் உத்தியோகத்தர்கள் முடிவினை வழங்காது பின்னடிக்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. இக் கூட்டுறவுச் சங்கத்தின் டென்டர் குழுவின் அங்கத்தவர் ஒருவரும் பிரதித் தவிசாளர் ஒருவருமான நபர் ஒருவர் கனணி தாபனம் ஒன்றின் முகாமையாளராக கடமையாற்றி இக் கூட்டுறவு மற்றும் அக் கனணி தாபனத்திற்கு இடையே சேவை உடன்படிக்கை ஒன்றினை கையொப்பமிட்டுள்ளார் எனவும் அது சங்கத்தின் இடைக்கால யாப்பினை மீறியது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. காலம் கடந்த கடனாளி ஒருவராக சங்கத்தில் இருந்து அகற்றப்பட்ட நபர் ஒருவர் இன்னும் நீர்கொழும்பு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் ஒருவராக இருப்பது சட்டத்திற்கு விரோதமானது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. இவ்வாறான குற்றவாளிகளுக்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

**06.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/92)**

அ. i. நீர்கொழும்பு மாநகர சபையினால் கொச்சி கடை ஓவிடிய தோட்டத்தில் கழிவினை போடுவது எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?
ii. அதற்காக தோட்ட உரிமையாளரின் அங்கீகாரம் ஒன்று இருக்கின்றதா ?
iii. அதற்காக அவருக்கு கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்படுகின்றதா ? மாதாந்தம் எவ்வளவு நிதி செலவு செய்யப்படுகின்றது ?

iv. கழிவினை அகற்றுவதற்காக கேள்வி ஒழுங்குவிதி ஒன்று கடைபிடிக்கப்படுகின்றதா ? எப்போதிலிருந்து ?

v. அகற்றப்படும் கழிவுகளை மட்டப்படுத்துவதற்கு உரிய ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்று பயன்படுத்தப்படுகின்றதா ?

vi. அதற்காக கேள்வி நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டுள்ளதா ?

vii. அதற்காக எவ்வளவு நிதி இது வரை செலுத்தப்பட்டுள்ளது ?

viii. மாதாந்தம் மேற்கொண்ட செலவினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஆ. i. ஓவிடியா தோட்டத்தில் போடப்பட்ட கழிவுகளை மூடுவதற்கு எப்போது தொடக்கம் மண் இடுவது ஆரம்பிக்கப்பட்டது ?

ii. அன்றில் இருந்து இது வரை எவ்வளவு கியூப் மணல் பயன்படுத்தப்பட்டது ?

iii. ஒரு கியூப் மணலுக்காக செலுத்தப்பட்ட நிதி எவ்வளவு ?

iv. இது வரை எவ்வளவு நிதி செலுத்தப்பட்டுள்ளது ?

v. மண்ணினை இடுவதற்காக சட்டரீதியான முறை ஒன்று கடைபிடிக்கப்பட்டதா ?

vi. அது என்ன ?

**07.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/93)**

அ. i. நீர்கொழும்பு மாநகர சபையின் கழிவுகளை அகற்றுவதற்கு எதிராக வழக்கொன்று காணப்படுகின்றதா ?

ii. அந்த வழக்கிற்காக இது வரை செலவு செய்யப்பட்ட சட்டத்தரணிகள் கட்டணம் எவ்வளவு ?

ஆ. i. அக் கழிவுகளை அகற்றியதனால் கொச்சிக்கடை ஓவிடியாவத்தை பிரதேசத்தில் சுற்றால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. அப் பிரதேசத்தில் ஊற்று நீர் மாசடைந்துள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

iii. அப் பிரதேசத்திற்கு அண்மையில் மஹா ஓயாவிற்கு வழிந்தோடும் சிறிய கால்வாய் வழி இந்த கழிவுகளினால் மாசடைகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

iv. இப் பிரதேசத்தில் நுளம்புகள் பரவுவது அதிகமாகி டெங்கு கிருமிகள் பெருகுவது அதிகரித்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

v. பயங்கரமான துர் நாற்றத்தினால் சுவாச நோய்கள் அதிகரித்து சுகாதார பிரச்சினை ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

**08.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/94)**

அ. i. நீர்கொழும்பு மாநகர சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக எனக் குறிப்பிட்டு வெளிநாடு சுற்றுலா ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா ? அவ்வாறு சென்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ii. எந்தெந்த நாடுகளுக்காக இச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது ?

iii. அச் சந்தர்ப்பத்தில் பங்குபற்றியவர்கள் யார் ? செலவு செய்யப்பட்ட நிதி எவ்வளவு ?

iv. இச் சுற்றுலாவின் போது பெற்றுக் கொண்ட அறிவினைப் பயன்படுத்தி செயற்றிட்ட யோசனைகள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதா ?

v. அவற்றைச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஆ. i. கழிவுப் பொருட்களை மீள் சுழற்சி செய்வதற்காக ஏதாவதொரு தாபனம் ஒன்று அல்லது பல தாபனங்கள் மாற்று வழி யோனைகளை முன்வைத்துள்ளனவா ?

ii. அப்படியாயின் அப் பிரேரணைகளை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

**09.** **கௌரவ ரொயிஸ் விஜித பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/95)**

அ. நீர்கொழும்பு கடற்கரை கோட்டை விளையாட்டு மைதானத்திற்கு வடக்கு திசையில் பிரபல்யமான மீன் விற்பனை சந்தை ஒன்று காணப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அச் சந்தை இலங்கைக்கு உதவி வழங்கும் ஜைக்கா என்ற பெயர் கொண்ட சர்வதேச தாபனத்தின் உதவியின் கீழ் நிர்மானிக்கப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இவ்வாறு ஜைக்கா உதவி நீர்கொழும்பு மாநகர சபைக்கு வருமானம் உழைக்கவே கிடைக்கப்ப பெற்றுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. அச் சந்தை ஆரம்பமாகிய தினம் தொடக்கம் இது வரை வருடாந்தம் வெவ்வேறாக நீர்கொழும்பு மாநகர சபைக்கு கிடைக்கப் பெற்ற வருமானத்தை அறிந்து கொள்ள இயலுமா ? இல்லையாயின் அதற்குரிய காரணத்தை கூறுங்கள் ?

உ. இரும்புக் குழாய் மற்றும் இரும்புக் கூரைத் தகடுகளைப் பயன்படுத்தியே அது நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஊ. நிர்மாணிக்கப்பட்டு 10 வருடங்களைத் தாண்டாத இக் கட்டடம் கடற் காற்றின் தாக்கத்திற்கு உட்பட்டு தூர்ந்து போய் சில சில இடங்கள் உடைந்து விழுந்துள்ளது என்பதனை உங்களுக்கு காணக் கூடியதாக இருந்ததா ?

எ. இக் கட்டடம் மக்களுக்கு மேல் உடைந்து விழுந்து விபத்து ஒன்று ஏற்படுவதற்கு முன்னர் இக் கட்டடத்தினை எவரின் மூலம் பழுதுபார்ப்பீர்கள் ? இல்லாவிடின் எத் தாபனத்தினால் பழுது பார்க்கப்படவுள்ளது ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபை நடவடிக்கை I

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை** :

இன்றைய தினம் நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கை விடயத்தின் கீழ் காணப்படும் இலக்கம் (02) மற்றும் (03) ஆகிய செயற்பாடுகளுக்காக விதி இலக்கங்கள் 57(1), 57(4) மற்றும் 57(5) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடை ஒன்றும் ஏற்படக் கூடாது எனக் கருதி செயற்பட வேண்டும்.

**சபை நடவடிக்கை II**

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை** :

"இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்"

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01.** **கௌரவ நிமல் சந்திரரத்ன அவர்கள்**

இலங்கையில் அரசாங்கங்கள் காலத்திற்கு காலம் மாற்றம் அடைவதன் கீழ் கல்வித் துறையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்ற படியால் இலங்கையினுள் தேசிய கல்விக் கொள்கை ஒன்றினை தயாரிக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை அரசிடம் கேட்டுக் கொள்கின்றது.

**(பி/vi(1)17/05)**

**02.** **கௌரவ கே.டி. அறுண தீபால் அவர்கள்**

வெள்ளம், வரட்சி மற்றும் ஏனைய இயற்கை அனர்த்த வேளையில் பாதிப்புக்கு உட்பட்டவர்களுக்கு விரைவாக சலுகைகளை வழங்குவதில் ஏற்படும் இடையூறுகளை தவிர்ப்பதற்காக அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஒருங்கிய பட்டியலின் 7 ஆவது பகுதிக்கு உரிய சலுகைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மூன்று மாவட்டங்களும் உட்படுமாறு இடர் முகாமைத்துவ நிலையம் ஒன்றினை ஸ்தாபிக்க வேண்டும் எனவும், முதலாவதாக களுத்தறை மாவட்டத்திற்காக பண்டாரகம மற்றும் மத்துகமை தேர்தல் தொகுதி இரண்டிலும் உரிய நிலையங்களை அமைத்து தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் வளங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக் கை எடுக்க வேண்டும் எனவும் இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi(1)17/06)**

## XI. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர்** (மே.மா)

**பிரேரணை** :

"**மேல் மாகாணத்தின்** 2017 **இன் ............. ஆம் இலக்கம் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்களைச் செயற்படுத்தும் நியதிச் சட்டம்**"

[ 2017.08.22 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்ட வேலைத் திட்டத்துடன் தொடர்புடையது ]

**02.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர்** (மே.மா)

**பிரேரணை** :

**<u>2017 குறைநிரப்பு மதிப்பீடு - 01</u>**

2017 ஆம் ஆண்டுக்காக மேல் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் காரியாலயங்களின் கீழே குறிப்பிடப்படும் தேவைகளுக்காக அதாவது

- 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டத்திற்காக மேல் மாகாண சபைக்கு உரிய நிர்மாணங்களுக்காக 2017 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட அரச மானியங்களுக்காக ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்

- 2016 ஆம் ஆண்டு செலுத்தப்படாத பட்டியல்களைச் செலுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டினுள் அரசிடமிருந்து கிடைத்த மானியத்தை மாகாண அபிவிருத்தி விடயங்களுக்காக பயன்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

- மாகாண சபையினால் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விடுமுறை விடுதிக்காக காணியினைக் கையேற்றுக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

- உலக வங்கி உதவியின் கீழ் சுகாதார துறைக்காக கடந்த ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற நிதியில் மீதியானவற்றை 2017 ஆம் ஆண்டின் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்த ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்

- கௌரவ மாகாண சபை உறுப்பினர்களுக்காக அதிகரிக்கப்பட்ட படி மற்றும் சுகாதார வாழ்க்கை அவசர விபத்துக் காப்புறுதிப் பாதுகாப்பிற்கு செலுத்துவதற்குத் தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

- சுகாதார போசாக்கு மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்க திருத்தப்பட்ட மேலதிக நேரப்படியினை சுகாதாரப் பணியாட்களுக்கு செலுத்துவதற்குத் தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

- கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்க ஆசிரியர்களின் நிலுவைச் சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்த அத்துடன் புதிய ஆட்சேர்ப்பிற்குத் தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துதல்.

- கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் புதிய ஆட்சேர்ப்புகளுக்கு தேவையான ஏற்பாட்டினை ஏற்படுத்துதல் போன்ற தேவைகளுக்காக

2017 ஆம் ஆண்டிற்காக குறை நிரப்பு மதிப்பீடு ஒன்றினை முன்வைக்க வேண்டியுள்ள படியால் அதற்காக

- அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட அரச மானியம் ரூபா. 5,799,162,000/- உம்

- 2016 ஆம் ஆண்டு செலுத்தப்படாத பட்டியல்களை செலுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டினுள் அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற மானியம் ரூபா. 1,250,000,000/- உம்

- முன்னைய வருடங்களில் உலக வங்கி உதவியின் கீழ் கிடைக்கப் பெற்ற நிதியில் செலவு செய்யப்படாது மீதமாக இருந்த நிதி ரூபா. 90,827,000/- மற்றும்

- மாகாண சபை வருமானத்தில் ரூபா. 718,634,000/- ஆகுமாறு தீர்த்துக் கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் முழு ஏற்பாடு ரூபா ஏழு பில்லியன், எண்ணூற்று ஐம்பத்தெட்டு மில்லியன், அறுநூற்று இருபத்து மூவாயிரம் (ரூ. 7,858,623,000/-) ஆகுமாறு தயாரிக்கப்பட்ட 2017 குறை நிரப்பு மதிப்பீடு 01 ஐ அங்கீகரிக்க வேண்டும்.

**03.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**<u>2017 குறைநிரப்பு மதிப்பீடு - 01 இற்குறிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்</u>**

2017 ஆம் ஆண்டு குறைநிரப்பு மதிப்பீடு 01 க்கு உரிய ரூபா ஏழு பில்லியன், எண்ணூற்று ஐம்பத்து எட்டு மில்லியன், அறுநூற்று இருபத்து மூவாயிரம் (ரூ. 7,858,623,000/-) நிதியினை மேல் மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கும் அம் மேல் மாகாண சபை நிதியத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் மானியமாகவோ அல்லது வேறு வழியிலோ கிடைக்கும் நிதியினை பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கும் 2017 ஆம் ஆண்டின் ........... ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும்.

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2017.09.06 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.

2017.09.05 ஆந் திகதி (செவ்வாய் கிழமை) சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாகும்.